ஏடிஎம் மையத்தில் கிடந்த

ரூ. 2 ஆயிரத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த கூலித் தொழிலாளி

ஏடிஎம் மையத்தில் கிடந்த ரூ. 2 ஆயிரத்தை காவல் ஆய்வாளர் இளங்கோவிடம் ஒப்படைத்த ரவிச்சந்திரன்.

அன்னூர், மே 21: கோவில்பாளையத்தில் ஏடிஎம் மையத்துக்குள் கிடந்த ரூ. 2 ஆயிரம் ரொக்கத்தை எடுத்து காவல் நிலையத்தில் ஒப்படைத்த கூலித் தொழிலாளிக்கு போலீஸார் பாராட்டு தெரிவித்தனர்.

கோவில்பாளையம் ராமன்குட்டை பகுதியைச் சேர்ந்தவர் கூலித் தொழிலாளி ரவிச்சந்திரன்(38). இவர் கோவில்பாளையம் காவல் நிலையம் எதிரே உள்ள ஏடிஎம் மையத்துக்கு பணம் எடுக்க புதன்கிழமை சென்றுள்ளார். அப்போது அந்த ஏடிஎம் மையத்தில் ரூ. 2 ஆயிரம் கேட்பாரற்று கீழே கிடந்துள்ளது. இதைப் பார்த்த ரவிச்சந்திரன் அந்தப் பணத்தை எடுத்து சென்று கோவில்பாளையம் காவல் ஆய்வாளர் இளங்கோவிடம் கொடுத்துள்ளார். இதையடுத்து அவரை போலீஸார் பாராட்டினர். மேலும் ஏடிஎம் மையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்து பணத்தை உரிய நபரிடம் வழங்குவதாக போலீஸார் தெரிவித்தனர்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

கோவை, மே 21: கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபரை போலீஸார் தேடி வருகின்றனர்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பழையது, புதியது என்று 2 கட்டடங்கள் உள்ளன.

இதில், புதிய கட்டடத்தில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் அறைகளோடு குடிமைப் பொருள் வழங்கல் துறை, கனிம வளத் துறை, வேளாண்மைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலகங்கள் உள்ளன. பழைய கட்டடத்தில் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம், சமூக நலத் துறை, நிலவரித் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலகங்கள் உள்ளன.

இந்நிலையில், ஆட்சியர் அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு புதன்கிழமை பிற்பகல் ஒரு மின்னஞ்சல் வந்தது.

அதில், ஆட்சியர் அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. அது பிற்பகல் 3 மணியளவில் வெடிக்கும். முடிந்தால் தடுத்து பாருங்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த ஆட்சியர் அலுவலக ஊழியர்கள் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவருக்கும், மாநகர காவல் ஆணையர் அலுவலகத்துக்கும் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவு போலீஸார் மோப்ப நாய், மெட்டல் டிடெக்டர் கருவி உதவியுடன் புதிய, பழைய கட்டடங்களில் மாலை 6.30 மணி வரையில் சோதனையில் ஈடுபட்டனர். ஆனால், வெடிகுண்டு எதுவும் கிடைக்கவில்லை. அப்போதுதான், அந்த செய்தி புரளி என்பது தெரியவந்தது.

வெடிகுண்டு மிரட்டல் வந்த மின்னஞ்சல் முகவரி குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆட்சியர் அலுவலகத்தில் சோதனை மேற்கொண்ட வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவினர்.

நாளைய மின்தடை: காளப்பட்டி

கோவை, மே 21: காளப்பட்டி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால் வெள்ளிக்கிழமை (மே 23) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என்று மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின் விநியோகம் தடை செய்யப்படும் பகுதிகள்: காளப்பட்டி, வீரியம்பாளையம், சேரன் மாநகர், நேரு நகர், சிட்ரா, அசோக் நகர், வழியம்பாளையம், பாலாஜி நகர், கே.ஆர்.பாளையம், ஜீவா நகர், விளாங்குறிச்சி, தண்ணீர் பந்தல், லஷ்மி நகர், முருகன் நகர், பீளமேடு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஷார்ப் நகர், மகேஷ்வரி நகர், குமுதம் நகர், செங்காளியப்பன் நகர்.

விளாங்குறிச்சியில் ரூ.15.95 கோடியில் 'தோழி' மகளிர் விடுதி

முதல்வர் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்

கோவையில் நடைபெற்ற தோழி விடுதி அமைக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் உள்ளிட்டோர்.

கோவை, மே 21: கோவை மாநகராட்சி, விளாங்குறிச்சியில் ரூ.15.95 கோடி மதிப்பீட்டில் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலமாக புதன்கிழமை அடிக்கல் நாட்டினார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், பணி நிமித்தமாக தங்களது சொந்த ஊர்களை விட்டு பிறநகரங்களுக்கு இடம்பெயரும் பணிபுரியும் பெண்களின் தேவைகளை உணர்ந்து தரமான, பாதுகாப்பான மற்றும் குறைந்த கட்டணத்தில் பெண்களுக்கான தங்கும் விடுதிகளான 'தோழி' விடுதிகள் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தரமணி, சேப்பாக்கம், மதுரை, கோவை, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, ஈரோடு, காஞ்சிபுரம், கடலூர், தருமபுரி, தேனி, சிவகங்கை, ராணிப்பேட்டை, கரூர் ஆகிய இடங்களில் ரூ.176.93 கோடி மதிப்பீட்டில் 14 'தோழி' விடுதிகள் அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்.

கோவை மாநகராட்சி, விளாங்குறிச்சியில் 200 படுக்கைகளுடன் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன், ரூ.15.95 கோடி மதிப்பீட்டில் 29,321 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 'தோழி' விடுதி அமைக்கப்பட உள்ளது.

கோவையில் நடைபெற்ற விழாவில், மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை எம்.பி. கணபதி ப. ராஜ்குமார், மேயர் கா.ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆன்லைன் வர்த்தகத்தில் ரூ.6.80 லட்சம் மோசடி: மேலும் ஒருவர் கைது

கோவை, மே 21: ஆன்லைன் வர்த்தகத்தில் ரூ.6.80 லட்சம் மோசடியில் ஈடுபட்ட வழக்கில் மேலும் ஒருவரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை, ஜெம் நகரைச் சேர்ந்த 30 வயது நபரிடம் ஆன்லைனில் முதலீடு செய்தால் அதிக லாபம் பெறலாம் எனக்கூறி ரூ.6.80 லட்சம் மோசடியில் ஈடுபட்டது தொடர்பாக கேரள மாநிலம், திருச்சூரை சேர்ந்த ஆனந்த கிருஷ்ணா (20), விஷ்ணு (28), சுஜித் (26) ஆகியோரை போலீஸார் ஏற்கெனவே கைது செய்தனர்.

இந்நிலையில், அந்த வழக்கில் கேரள மாநிலம், திருச்சூர் கனிமங்கலத்தைச் சேர்ந்த அருண் (31) என்பவருக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, திருச்சூர் சென்ற கோவை போலீஸார், அருணை செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

இது குறித்து சைபர் கிரைம் போலீஸார் கூறுகையில், ஆன்லைன் மோசடிகளில் பொதுவாக வெளிநாட்டில் இருந்துதான் பணப் பரிமாற்றம் நடைபெறும். ஆனால், இந்த வழக்கில் கேரளத்தில் இருந்தே பணப் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்றனர்.

ஐபிஎல் சூதாட்டத்தில் ஈடுபட்டவர் கைது: ரூ.2.50 லட்சம் ரொக்கம் பறிமுதல்

கோவை, மே 21: கோவையில் ஐபிஎல் சூதாட்டத்தில் ஈடுபட்ட நபரைக் கைது செய்த போலீஸார், அவரிடமிருந்த ரூ.2.50 லட்சம் ரொக்கம், சொகுசு கார் உள்ளிட்டவற்றைப் பறிமுதல் செய்தனர்.

இந்தியாவில் நடைபெற்று வரும் ஐபிஎல் கிரிக்கெட் போட்டியை மையமாக வைத்து யார் அதிக ரன்கள் எடுப்பார்கள், எந்த ஓவரில் எத்தனை சிக்சர் என்பன உள்பட பல்வேறு ஊகங்களை முன்வைத்து சூதாட்டம் நடைபெற்று வருகிறது.

அதன்படி, கோவை, காட்டூர் பகுதியில் ஐபிஎல் சூதாட்டத்தில் ஈடுபட்ட 7 பேரைக் கடந்த ஏப்ரல் 12-ஆம் தேதி கைது செய்த போலீஸார், அவர்களிடமிருந்த ரூ.1.10 கோடி ரொக்கம், 2 சொகுசு கார்கள் மற்றும் 12 கைப்பேசிகளைப் பறிமுதல் செய்தனர்.

இதேபோல, செல்வபுரத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 2 பேரை ஏப்ரல் 22-ஆம் தேதி கைது செய்த போலீஸார், அவர்களிடமிருந்த ரூ.1.50 லட்சம் ரொக்கம், கார், கைப்பேசிகள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். இந்நிலையில், செல்வபுரம் கல்லாமேடு பகுதியைச் சேர்ந்த அர்ஜுனன் (35) என்பவர் செல்வபுரம் காவல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை புகார் மனு அளித்தார்.

அதில், சொக்கம்புதூரைச் சேர்ந்த ராஜகணேஷ் (30), சௌந்தர்ராஜன் ஆகியோர் ஐபிஎல் சூதாட்டத்தில் அதிகமாக பணம் சம்பாதிக்கலாம் எனக்கூறி, என்னிடமிருந்து ரூ.4.50 லட்சத்தை வாங்கி மோசடி செய்துவிட்டனர். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து பணத்தைப் பெற்றுத்தர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

போலீஸார் நடத்திய விசாரணையில், ராஜகணேஷ், சௌந்தர்ராஜன் இருவரும் சேர்ந்து செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சென்னை-ராஜஸ்தான் ஐபிஎல் கிரிக்கெட் ஆட்டம் உள்பட பல்வேறு ஆட்டங்களில் கைப்பேசி செயலி மூலம் சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதையடுத்து, சொக்கம்புதூர்- பொன்னையராஜபுரம் சந்திப்பில் உள்ள ஒரு வீட்டில் பதுங்கி இருந்த ராஜகணேஷை புதன்கிழமை கைது செய்த போலீஸார், அவரிடமிருந்த ரூ.2.50 லட்சம் ரொக்கம், ஒரு சொகுசு கார், 2 கைப்பேசிகள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

தலைமறைவான சௌந்தர்ராஜனை போலீஸார் தேடி வருகின்றனர்.

இது குறித்து காவல் துறை அதிகாரிகள் கூறியதாவது: ஐபிஎல் சூதாட்டம் தொடர்பாக கோவை மாநகரப் பகுதியில் ஏற்கெனவே கைதானவர்களுக்கும், தற்போது கைதான ராஜகணேஷுக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது.

அவர் ஐபிஎல் சூதாட்டத்தில் சம்பாதித்த பணத்தை வைத்து வேடப்பட்டியில் ரூ.50 லட்சத்துக்கு நிலம் வாங்கி உள்ளதும், அவருடைய நெருங்கிய உறவினர்களின் வங்கிக் கணக்குகளில் ரூ.46 லட்சம் டெபாசிட் செய்துள்ளதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கணக்குகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன. அத்துடன் சூதாட்ட பணத்தில் ராஜகணேஷ் வாங்கிய நிலத்தை முடக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றனர்.

வாகன ஓட்டுநர் தற்கொலை

பெ.நா.பாளையம், மே 21: பெரியநாயக்கன்பாளையம் அருகே வாகன ஓட்டுநர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சாமிசெட்டிபாளையம் அம்பேத்கர் நகரைச் சேர்ந்தவர் ரங்கசாமி (33). வாகன ஓட்டுநராக வேலை செய்து வந்தார். இவருக்கு மனைவி, மகள், மகன் உள்ளனர். ரங்கசாமிக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது. இதனால் மனநலம் பாதிக்கப்பட்ட அவர் கடந்த ஓராண்டாக கருமத்தம்பட்டியில் உள்ள தனியார் மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், பள்ளிகோடை விடுமுறையையொட்டி குழந்தைகளுடன் அவரது மனைவி, சூலூரில் உள்ள தனது பெற்றோர் வீட்டுக்கு சென்றுள்ளார். அவர் புதன்கிழமை வீட்டுக்கு திரும்பும்போது ரங்கசாமி வீட்டின் முன்பு இருக்கும் பந்தலில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. இது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இளைஞர் தற்கொலை

சூலூர், மே 21: கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வெள்ளையம்பட்டியைச் சேர்ந்தவர் கோபி (31). இவரது மனைவி விஜயலட்சுமி (26). இவர்கள் சூலூர், அப்பநாயக்கன்பட்டி, மகாலட்சுமி கோயில் தெருவில் வசித்து வந்தனர்.

தனியார் நிதி நிறுவனத்தில் பணியாற்றி வந்த கோபி, வேலையை இழந்து கடந்த ஒரு மாதமாக மன உளைச்சலில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் கோபி, சூலூரில் உள்ள தனது சகோதரி வீட்டுக்கு கடந்த மே 16-ஆம் தேதி வந்துள்ளார். அங்கிருந்து கொண்டே வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. ஆனால், வேலை கிடைக்காததால் மனமுடைந்த கோபி பூச்சிக்கொல்லி மருந்து குடித்து மே 19-ஆம் தேதி தற்கொலைக்கு முயன்றார். இதையடுத்து அவர் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார். இது குறித்து சூலூர் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கனரா வங்கி Canara Bank

சிண்டிகேட் Syndicate

பிராந்திய அலுவலகம்-1 - கோயமுத்தூர் - 641 002.

இ-ஏல விற்பனை ரத்து அறிவிப்பு

13.05.2025 தேதியன்று இதே நாளிதழில் வெளியிடப்பட்ட, சர்பாஸி சட்டத்தின் கீழான, ' விற்பனை அறிவிப்பு'படி, **வ.எண்.1, கோயமுத்தூர் சாய்பாபா காலனி கிளையின், M/s. ராஜன் மில்க் டெய்ரி** கடன்தாரர் கணக்கிற்கான அடமான சொத்தின், 28.05.2025 தேதியில் நடைபெற இருந்த இ-ஏல விற்பனை நிர்வாகக் காரணங்களால் **ரத்து செய்யப்படுகிறது.**

தேதி : 21.05.2025
இடம் : கோயமுத்தூர்
அதிகாரபூர்வ அதிகாரி

தமிழ்நாடு அரசு – பேரூராட்சிகள் துறை

ந.க.எண். 1254/2025/ப1 திருநெல்வேலி மண்டலம் நாள் 20.05.2025

திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளின் 2024–2025 ஆம் நிதியாண்டில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் 24 இருசக்கர நான்கு) எண்ணம் காடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரண்டு உறைகள் முறைகள்)

1) திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி மாவட்டம் கோபாலசமுத்திரம்–1, மணிமுத்தாறு–1 மேலச்செவல்–1, மூலைக்கரைப்பட்டி–1, திருக்குறுங்குடி–1, தென்காசி மாவட்டம் அச்சன்புதூர்–1, ஆழ்வார்குறிச்சி–1, இலஞ்சி–1, மேலகரம்–1, பண்பொழி–1, புதூர்(செ)–1, இராயகிரி–1, சுந்தரபாண்டியபுரம் –1, திருவேங்கடம்–1 தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி–1, ஆத்தூர்–1, ஏரல்–1, எட்டையபுரம்–1, கழுகுமலை–1, கயத்தாறு–1, விளாத்திகுளம்–1, சாத்தான்குளம்–1, சாயர்புரம்–1, திருவைகுண்டம்–1 ஆகிய பேரூராட்சிகளில் 2024–2025 ஆம் நிதியாண்டின் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் 24 இருசக்கர நான்கு) எண்ணம் காடு மற்றும் கழிவுநீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்வதற்கான இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனியாக வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விபரங்களை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 2) பணியின் மதிப்பீடு ரூ. 1038.00 இலட்சம். 3) பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். 4) பொதுவான நேரம் மற்றும் நாள்.

அ) ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்தல் : 22.05.2025 காலை 10.00 மணி முதல் 23.06.2025 மாலை 3.00 மணி வரை
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 23.06.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : 23.06.2025 மாலை 3.30 மணி
ஈ) முன் கலந்தாய்வு கூட்டம் : 10.06.2025 காலை 11.00 மணி

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக இருப்பின், அதற்கு அடுத்த வேலைநாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.இ/ 2420 /ஒப்பந்தப்புள்ளி/2025 பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்.

SMFG IndiaCredit **SMFG INDIA CREDIT COMPANY LIMITED**

பெருநிறுவன அலுவலகம் - 10 வது தளம், அலுவலக எண். 101, 102 & 103, 2 வடக்கு அவென்யூ, மேக்கர் மேக்சிட்டி, பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை - 400 051

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்காக)
(பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(1) ன் கீழ்)

இப்பவும், இதன் கீழ்கையொப்பமிட்ட நபர், கமர்ஜோன் IT பார்க், டவர் B, 1 வது தளம், மவுண்ட் - பூந்தமல்லி நெடுஞ்சாலை, போரூர், சென்னை, தமிழ்நாடு - 600 116 என்ற முகவரியில் பதிவு அலுவலகமும், 10 வது தளம், அலுவலக எண். 101, 102 & 103, 2 வடக்கு அவென்யூ, மேக்கர் மேக்சிட்டி, பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை - 400 051 என்ற முகவரியில் பெருநிறுவன அலுவலகமும் கொண்ட SMFG இந்தியா க்ரெடிட் கம்பெனி லிமிடெட் - என்ற நிறுவனத்தின், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) ன் கீழான அதிகாரப்பூர்வ அலுவலராகவும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 3 ன் கீழ் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தினை செயலுறுத்தியும், கடன் கணக்கு எண். 214220911686285 ன் கீழான கடன்தாரர்களாகிய 1). பரமசிவம் S 2). சிவகாமி டெக்ஸ்டைல் 3). பவித்ரா K ஆகியோருக்கு மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) ன் கீழ், 10.03.2025 தேதிய கோரிக்கை அறிவிப்பை அனுப்பியதைத், அதில் குறிப்பிட்டுள்ள 06 மார்ச் 2025 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ.41,73,578/- (ரூபாய். நாற்பத்து ஒரு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐநூற்று எழுபத்து எட்டு மட்டும்) யை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார்.

கடன்தாரர்(கள்) அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13 உட்பிரிவு (4) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 ன் படி, தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி 2025 ம் வருடம் மே மாதம் 20 ம் தேதியன்று சுவாதீனம் எடுத்துள்ளார். குறிப்பாக இதன் மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர், மேற்சொன்ன சொத்துக்களுடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு அச்சொத்துக்களின் மீது ஏற்படுத்தப்படும் எவ்விதமான வில்லங்கமும், கூடியவுடனான இந்தியா க்ரெடிட் கம்பெனி லிமிடெட் - க்கு செலுத்தப்பட வேண்டிய 06 மார்ச் 2025 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ.41,73,578/- (ரூபாய். நாற்பத்து ஒரு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐநூற்று எழுபத்து எட்டு மட்டும்) மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது.

ஜாமீன் சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8) ன் கீழ், கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விபரம் : சொத்தின் உரிமையாளர் - திரு பவித்ரா K சொத்து விபரம் - ஷெட்யூல் A சொத்து - ஆவண எண். 19338/2022 ன் படி, சர்வே எண். - சர்வே எண். 51, வருவாய் ஆவணத்தின் படி, சர்வே எண். 51/2, மொத்த பரப்பு - பு ஏக் 0.36 கதவு எண் (சொத்து வரி படி) - இல்லை., ப்ளாட் எண். - இல்லை., அமைவிடம் - கோயமுத்தூர் தெற்கு பதிவு மாவட்டம், சூலூர் சார்பதிவு மாவட்டம், பல்லடம் தாலுக்கா, பருவை கிராமம். 836 சதுர அடி இடத்துக்கான எல்லைகளாவன - வடக்கு - சர்வே எண். 52 ல் உள்ள கருப்பண கவுண்டர் மற்றும் மாரப்ப கவுண்டருக்கு சொந்தமான இடம், கிழக்கு - சர்வே எண். 51/2 பகுதி, தெற்கு - சர்வே எண். 51/2 பகுதியில் உள்ள விஜயலட்சுமிக்கு சொந்தமான இடம், கிழக்கு - சர்வே எண். 51/2 பகுதியில் உள்ள கிருத்திகாவுக்கு சொந்தமான இடம்., என மொத்தம் பு ஏக் 0.36 இடம்., மற்றும் அதனுடன் கூடிய அனைத்து உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள். இச்சொத்து தற்போது சர்வே எண். 51/2A ல் அமைந்துள்ளது. இச்சொத்து பருவை பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்துள்ளது.

இடம் - கோயமுத்தூர்
தேதி - 22.05.2025
ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
SMFG இந்தியா க்ரெடிட் கம்பெனி லிமிடெட்

எஸ்எம்எப்எல் சர்வீசஸ் லிமிடெட்
(முன்னர் S.M.I.L.E. மைக்ரோ ஃபைனான்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: 8வது தளம், தெற்கு டவர், கேஆர்எம் பிளாசா, எண். 2, ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600031. மின்னஞ்சல் : smflliq@gmail.com, knpchennai@gmail.com
இணையதளம் :www.sfltd.in CIN: U70200TN1995PLC030604

மூன்றாவது பங்களிப்பாளர்களின் கூட்டத்திற்கான அறிவிப்பு

நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை வாரியத்தின் (தன்னார்வக் கலைப்பின் கீழ்) விதிமுறைகள், 2017-ன் 37(2)வது விதியின் கீழ், எஸ்எம்எப்எல் சர்வீசஸ் லிமிடெட்டின் மூன்றாவது பங்களிப்பாளர்களின் கூட்டம் (தன்னார்வக் கலைப்பு நடைமுறை) **மே 28, 2025,** புதன்கிழமை அன்று, எண். 6, முதல் தளம், கோல்டன் என்கிளேவ், 184, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா 600010-உள்ள கலைப்பு அலுவலர் அலுவலகத்தில் மாலை 4.00 மணிக்கு காணொளி காட்சி மூலம் பின்வரும் வணிகத்தை பரிவர்த்தனை செய்ய நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. கலைப்பு அலுவலர் பங்களிப்பாளர்கள் கூட்டத்தின் தலைவராக செயல்படுவார்.

1. IBBI (தன்னார்வ கலைப்பு நடைமுறை) விதிமுறைகள், 2017-ன் விதி 37 (2) (b)-ன் படி பின்வரும் விஷயங்களைப் பற்றி விவாதிக்க:-
கலைப்பு அலுவலர். கலைப்பு நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை முன் வைப்பது உட்பட:
(i) பங்குதாரர்களின் செட்டில்மெண்ட் பட்டியல்
(ii) விற்கப்படாமல் மீதமுள்ள விற்கப்பட வேண்டிய அனைத்து சொத்துக்களின் விவரங்கள்,
(iii) பங்குதாரர்களுக்கு விநியோகம்.
(iv) பங்குதாரர்களுக்கு விற்கப்படாத சொத்துக்களின் விநியோகம்:
(v) கார்ப்பரேட் நபர் மூலமாகவோ அல்லது எதிராகவோ ஏதேனும் நிதி சம்பந்தமான வழக்குகளில் உள்ள முன்னேற்றங்கள்:
(vi) தொகுப்பின் பகுதி II-ன் அத்தியாயம் III-ன் கீழ் பரிவர்த்தனைகளைத் தவிர்ப்பதற்கான விண்ணப்பங்களை தாக்கல் செய்தல் மற்றும் முன்னேற்றங்கள்;
(vii) குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்முறையை முடிக்காததற்கான காரணங்கள் மற்றும் செயல்முறையை முடிக்க தேவையான கூடுதல் காலம்

2. தலைவரின் அனுமதியுடன் வேறு எந்த விஷயமும்

கூட்டத்திற்கான அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்திலும் பார்க்கலாம்: **http://sfltd.in**

தன்னார்வ கலைப்பு துவங்கிய தேதியான, அதாவது **ஆகஸ்ட் 16, 2024** அன்று, உறுப்பினர்கள்/பயனுள்ள உரிமையாளர்களின் பதிவேட்டில் உள்ள நபர்கள் மட்டுமே ஆன்லைன்/மின்னணு முறையில் நடத்தப்படும் பங்களிப்புக் கூட்டத்தில் காணொளி காட்சி தள வசதியைப் பெற உரிமை உண்டு.

கூட்டம் **ஜூம் (Zoom)** மூலம் காணொளியில் நடத்தப்படும். பங்களிப்பாளர்கள் **27.05.2025** அன்று அல்லது அதற்கு முன் காணொளி காட்சி மூலம் கூட்டத்தில் பங்கேற்பதற்கான இணைப்புக்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள கலைப்பு அலுவலர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Mail: smflliq@gmail.com, knpchennai@gmail.com
Phone: 9080086782; 044-42859843

எஸ்எம்எப்எல் சர்வீசஸ் லிமிடெட்டிற்காக
அனில் குமார் கிச்சா,
கலைப்பு அலுவலர்
பதிவு எண்: IBBI/IPA-001/IP-P00422/2017-18/10745
AFA: AA1/10745/02/311225/107802

இடம்: சென்னை
தேதி: 21.05.2025

equitas எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 4வது மாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண் 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2. தொ.பே: 044-42995000
தொலைநகல்: 044-42995050 www.equitasbank.com

தங்க நகை ஏல விற்பனை அறிவிப்பு

எங்களது வங்கி கிளைகளில் நகைக்கடன் வாங்கி சரிவர திருப்பிச் செலுத்தாத அனைவருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிப்பு, கடன்களை திரும்பச் செலுத்த வேண்டி பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், கடனை திருப்பிச் செலுத்தாதவர்களின், கீழே குறிப்பிடப்பட்ட கடன் எண்கள் நகைகளை கீழ்கண்ட கிளைகளில் குறிப்பிட்ட தேதியில் & நேரத்தில் பகிரங்க ஏலம் விடப்படும் என்று இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தேதி: 29.05.2025 நேரம்: காலை 10.00 மணி
இடம்: எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

நகரம்	கிளை	கடன் எண்கள்
கோயம்புத்தூர்	ஆர்.எஸ்.புரம்	RSPRMPJ2501080001 700010352749
திருப்பூர்	திருப்பூர்	TRPPRPJ2501240002 TRPPRPJ2404180001
ஈரோடு	கோபிசெட்டிப்பாளையம்	700010464901 GBICPPJ2408130001

குறிப்பு: 1. தங்கள் நகைகளை மீட்க நினைக்கும் வாடிக்கையாளர்கள் மொத்த நிலுவைத் தொகையை அடகு வைக்கப்பட்ட வங்கி கிளைகளில் ஏலத்திற்கு முன் செலுத்தி, நகைகளை மீட்கலாம். 2. ஏலம் எடுக்க விரும்புபவர்கள் அடையாள சான்று, வருமான வரி PAN கார்டு, GST எண் (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / கம்பெனிகள்) அளிக்க வேண்டும். 3. ரூ.1,00,000 முன் தொகையாக (EMD) ஏலம் ஆரம்பிக்கும் முன் செலுத்த வேண்டும்.

இடம்: கோயம்புத்தூர்
தேதி : 21 மே 2025
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்காக
அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி

New Zenith
Academy for IAS & IPS
Central Govt Exams Only

- UPSC - IAS / IPS
- SSC - CGL
- IBPS / SBI-PO & CBO
- RBI 'B' GRADE OFFICER

Batch 1 : 6am-8am (Daily)
Batch 2 : 9.30am-3pm (Daily)
Batch 3 : 9am-4pm (Saturday & Sunday)

7 DAYS FREE DEMO

If no Satisfaction Fees will be returned!

No.71. Nehru Street, Opp to Hotel Mangala International, Ramnagar, Gandhipuram, Coimbatore - 641 009

89030 62577
96779 89733

Godrej Finance Limited — Godrej | FINANCE

பொது அறிவிப்பு

இந்திய ரிசர்வ் வங்கியின் (வங்கியில்லா நிதி நிறுவனம் - அளவீடு சார்ந்த ஒழுங்குமுறை) உத்தரவுகள், 2023 இன் பத்தி 43 இன் படி 'கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்' வழங்கும் பொது அறிவிப்பு.

கோத்ரெஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் (இனிமேல் "நிறுவனம்" அல்லது "GFL" என்று குறிப்பிடப்படுவது) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஆகும் (கார்ப்பரேட் அடையாள எண் U67120MH1992PLC065457). இது இந்திய ரிசர்வ் வங்கியால் (COR எண் 13.00368) வைப்புத்தொகை பெறாத வங்கியில்லா நிதி நிறுவனமாக ("NBFC") பதிவு செய்யப்பட்டுள்ளது. GFL தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கோத்ரெஜ் ஒன், பிரோஜ்ஷாநகர், கிழக்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, விக்ரோலி (கிழக்கு), மும்பை - 400079, மகாராஷ்டிரா என்ற முகவரியில் கொண்டுள்ளது.

இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், செயல்பாட்டு காரணங்களுக்காக, 4வது தளம், ஸ்ரீ வாரி கிகானி சென்டர், வடகோவை, கோயம்புத்தூர் - 641002, தமிழ்நாடு என்ற முகவரியில் உள்ள நிறுவனத்தின் கிளை அலுவலகம், இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள், SSS டவர்ஸ், கதவு எண் 432, இரண்டாவது தளம், மேட்டுப்பாளையம் சாலை, வடக்கு கோயம்புத்தூர், கோயம்புத்தூர் – 641043, தமிழ்நாடு என்ற முகவரிக்கு மாற்றுகிறது.

அனைத்து வாடிக்கையாளர் கேள்விகளையும் **customercare@godrejcapital.com** என்ற மின்னஞ்சல் முகவரியில் கேட்கலாம்.

இது தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் அல்லது கேள்விகள் இருந்தால், இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் தலைமை இணக்க அதிகாரி திரு. யோகேஷ் ஜெயின் அவர்களுக்கு அல்லது **gfl.compliance@godrejfinance.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் தெரிவிக்கலாம்.

கையொப்பமிடப்பட்டது
கோத்ரெஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக

இடம்: மும்பை
தேதி: 22/05/2025

SBI SME கணபதி கிளை (61798) : 41, ஸ்ரீலக்ஷ்மி மஹால், 8வது வீதி, டாடாபாத், கோயமுத்தூர்-641 012
போன் : 0422 -4348846
இமெயில் : sbi.61798@sbi.co.in

மின்-ஏல அறிவிப்பு
வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் விற்பனை

கடன் பெற்றவர் பெயர் : விண்ணப்பத்தின்படி கடன்தாரர் முகவரி:
M/s.சாய் ஸ்கந்த் எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட்,
எண். 273, 2வது தளம், மோனாலிசா, 6வது மெயின், 100 அடி ரோடு, டிஃபென்ஸ் காலனி, HAL 2வது ஸ்டேஜ், பெங்களூர், கர்நாடகா – 560 038.
கூடுதல் முகவரி: எண்.146/1, டீ எஸ்டேட் காம்பௌண்ட், ரேஸ் கோர்ஸ் சாலை, தமிழ்நாடு– 641 018.
உத்தரவாதமளித்தவர்கள் : 1. **திருமதி.செல்லம்மாள்.R,** த/பெ.திரு.ராமசாமி, எண்.90/10, எண்.90/11, D1, VIP தாமரை நகர், காந்திஜி வீதி 2, கொல்லம்பாளையம், ஈரோடு – 638 002.
2. **திரு.மாதவன் வையாபுரி,** த/பெ.வையாபுரி, எண்.90/10, எண்.90/11, D1, VIP தாமரை நகர், காந்திஜி வீதி 2, கொல்லம்பாளையம், ஈரோடு – 638 002.
3. **திரு.விஜய் பாபு மாதவன்,** எண்.504, முதல் தளம், 3வது குறுக்கு, 9வது மெயின், இந்திரா நகர், HAL 2வது ஸ்டேஜ், பெங்களூர் – 560 008

Vehicle Regn.No.: TN 66 AQ 5522
தயாரிப்பு/மாடல் : HYUNDAI VERNA 1.5 MPI IVT SX(O)
ரிசர்வ் விலை : ரூ.13,50,000/– + GST 18%

ஏல விற்பனை விபரம் :

வாகனத்தைப் பார்வையிடும் நாள் மற்றும் இடம் : **03.06.2025 அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 03.00 வரை)** G.K.பார்டு, எண்.517A, சத்தி ரோடு, இரட்டை கவலை தோட்டம், கணபதி அஞ்சல், கோயமுத்தூர் – 641 006.
ஒப்பந்தப்புள்ளி/மின்–ஏலம் நடைபெறும் நாள் & நேரம் : **04.06.2025** - Online
நேரம் : **காலை 11.00 மணி முதல் மாலை 05.00 வரை.**
விருப்பக் கடிதம் / KYC ஆவணங்கள் / EMD க்கான சான்று முதலியன சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம். Online மூலமாக : **03.06.2025 - மாலை 5.00 மணி வரை.**

1) ரிசர்வ் விலை : ரூ. 13,50,000/–; முன்வைப்புத் தொகை : ரூ.1,35,000/–; ஏல மடங்கு : ரூ.10,000/–

ஏலத்திற்கான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் :

முன்வைப்புத் தொகை (EMD) NEFT மூலமாக E-WALLET –ல் வரவு வைக்கப்பட வேண்டும். (இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள நிபந்தனை விபரங்களில் எண்.13-b ஐ பரிசீலிக்கவும்).
இந்த ஏலமானது **https://baanknet.com** இணையதளம் மூலமாக ஆன்லைனில் மட்டுமே நடத்தப்பெறும். **இதன் செயல்முறைகளுக்கு குறைந்தது இரண்டு முதல் மூன்று வேலை நாட்கள் எடுத்துக் கொள்ளப்படுவதால், ஏலதாரரின் பதிவு மின்–ஏலத் தேதிக்கு நன்கு முன்னதாக ஏலதாரரால் செய்து முடித்துக் கொண்டிருக்கப்பட வேண்டும்.**
மின்–ஏல விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு, பாதுகாக்கப்பட்ட கடனீந்த பாரத ஸ்டேட் பாங்குவின் இணையதளத்தின் (www.sbi.co.in) அல்லது மின்ஏலத்தின் சேவையாளர் M/s. PSB அலையன்ஸ் இணையதளத்தின் (https://baanknet.com) (கட்டணமில்லா எண்.+91 8291220220, இ–மெயில் :support.BAANKNET@psballiance.com) 'லிங்க்'கில் பரிசீலிக்கலாம்.

இடம் : கோயமுத்தூர்
தேதி : 16.05.2025
அதிகாரபூர்வ அதிகாரி
பாரத ஸ்டேட் பாங்கு, SME கணபதி கிளை,